அடிப்படையில் முதலாவதாக துணைக் கேள்வி கேட்கின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அந்தியூர் சட்டமன்றத் தொகுதியில், அந்தியூர் பகுதியில் ஒரு தொழிற்பேட்டை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மொத்தமாக 94 சிட்கோ தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் அரசுத் தொழிற்பேட்டைகள் (Government Estate) 35 ஆகும். மேலும், அந்தியூர் பகுதிக்கு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தொழிற்பேட்டை வேண்டுமென்று கேள்வி கேட்டுள்ளார். மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு, அந்தியூர் பகுதியில் தொழில் முனைவோர் அதிகப்படியான எண்ணிக்கையில் இருக்கும்பட்சத்தில், அங்கே மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதல் பெற்று அரசு நிலம் இருப்பதாகத் தெரிய வந்தால், தொழிற்பேட்டை அமைப்பதற்கு முன்வரும் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 76, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

76—

மணல் குவாரிகள்

***7766—திரு. கே. தங்கவேல்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மணல் குவாரிகளை அரசுடைமையாக்க அரசு ஆவன செய்யுமா?

2012 ஏப்ரல் 11]

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணைப்படி நுகர்வோருக்குச் சரியான விலையில் மணல் கிடைத்திடவும், வளர்ச்சி மற்றும் கட்டுமானப் பணிகள் தடையின்றி நடந்திடவும் அரசு, பொதுப் பணித் துறையின் வாயிலாக 2–10–2003 முதல் மணல் எடுத்து விநியோகம் செய்து வருகிறது என்பதை இந்தப் பேரவையின் வாயிலாகத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் மணல் குவாரிகளை அரசுடைமையாக்குவதன்மூலமாக, அரசுக்கு அதிகமாகக் கூடுதல் வருமானம் கிடைக்கும். பல இடங்களில், திருச்சி, கொள்ளிடம், திருவள்ளூர் மாவட்டம் மெய்யூர் ஆகிய இடங்களிலிருந்து அரசு நிர்ணயித்திருக்கின்ற அந்தக் கட்டணத்திற்கு மேலாக அல்லது 50 லாரிகள் அனுமதி பெற்றால், 10 லாரிகள் அனுமதியின்றி எடுத்துக்கொள்ளக்கூடிய நிலைமைகளும் தொடர்கின்றபட்சத்தில், அரசே மணல் குவாரிகளை அரசுடைமையாக்க முன்வருமா? இதன்மூலம் அரசு கூடுதல் வருமானத்தை ஈட்டுவதற்கு வாய்ப்பாக இருக்கும். இதை மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் ஏற்கெனவே கூறிய பதிலில் சொல்லியிருக்கிறேன். 2003 ஆம் ஆண்டே மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி, மணல் குவாரிகளை அரசே ஏற்று நடத்திக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல், 2011–2012 ஆம் ஆண்டு இதுவரை இல்லாத அளவிற்கு அரசினுடைய வருமானமாக ரூ.188 கோடி கிடைத்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

[2012 ஏப்ரல் 11

முற்பகல் 10—40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.*

திரு. ம. முத்துராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்டதையெல்லாம் கொடுத்துக் கொண்டிருக்கின்ற நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசில், மதுரை மாவட்டம், கட்டுமானத் தொழிலுக்கு மணல் இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. திருச்சியிலிருந்தோ, கரூரிலிருந்தோதான் மணல் மதுரைக்கு வந்து, அங்கிருந்து வாங்கக்கூடிய ஒரு சூழ்நிலையில் அங்குள்ள மக்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். இந்த நிலையைப் போக்கி, மதுரை மாவட்டத்திலேயே ஒரு மணல் குவாரியை அரசின் சார்பில் நடத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதைப்போல, மதுரையில் ஒரு புதிய மணல் குவாரி அமைப்பதற்குண்டான ஆய்வு செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள் பேசுகின்றபோது, அனுமதி இல்லாமல் லாரிகளில் மணல் எடுத்துச் செல்லப்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். நிச்சயமாக அதுபோல் இல்லை. 2011—2012 ஆம் ஆண்டு 5,315 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, கிட்டத்தட்ட 13 கோடி ரூபாய் அபராதமாக வசூலிக்கப்பட்டிருக்கின்றது என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாகத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 77, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள், மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள்.*